சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு

# உபமன்யுவின் ஸ்ரத்தை.

---

சிதம்பரத்தில் பழங்காலத்தில் சிவபெருமானை ஆனந்த நடராஜராக த்யானம் செய்து ப்ரதிஷ்ட்டை செய்தவர் ஸ்ரீவ்யாக்ர பாத மஹரிஷி. அவருக்கு ஒரு மகன். அவன் பெயர் தான் உபமன்யு. மிகச் சிறிய வயதில் இருந்தே பல நல்ல பழக்கவழக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்தவன்.

அவனுக்கு உரிய வயது வந்ததும் அவர் அப்பாவே குருவாக இருந்து பாடங்கள் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். பல குழந்தைகள் அவர் கீழ் படித்தனர். அவர் தன் மகன் என்று ஒரு போதும் எவ்வித சலுகையும் காட்டியதே இல்லை.அனைவரையும் ஒரே போல நடத்தினார்.

சில நாட்கள் கழித்ததும் அவர் உபமன்யுவை மேற்படிப்புக்கு என தௌமிய மஹரிஷியின் குருகுலப் பள்ளிக்கு அனுப்பினார்.

தௌமியர் உபமன்யுவின் அறிவுத் திறமையைக் கண்டு ஆச்சர்யப்பட்டு வியந்தார். ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.காலம் செல்கிறது, பாடங்கள் தொடர்கின்றன.உபமன்யுவின் திறமைக்குக் காரணம் ஸ்ரத்தை. அதை மற்றவர்களுக்கு எடுத்துக்கூற குரு முடிவு கட்டினார்.

அன்று காலை, மாணவர்கள் அனைவரும் பூஜைக்குப் பின் காலை உணவு உண்ண ஆஸ்ரமத்துள் சென்றனர். தௌமியர் உபமன்யுவைப் பார்த்து, ”தம்பி! இன்று முதல் நீ நான் சொல்லும் வரை ஆஸ்ரமத்தில் சாப்பிட வேண்டாம்!” என்று கூறிவிட்டார்.உபமன்யுவும் அதை ஏற்றுக் கொண்டு சாப்பாட்டைத் தவிர்த்து அதற்கு பதில் நிறைய பாடங்களைக் கற்று வருகிறார். ஒரு நாள் சென்றபின்;

குரு,”உபமன்யு ஆஸ்ரமத்தில் சாப்பிடாத நீ எப்படி சோர்வே இல்லாமல் இருக்கிறாய்?”

உபமன்யு,”குருவே! அடியேன் பக்கத்து வீடுகளில் பிக்ஷை செய்து உண்கிறேன்!”

குரு,”அடடே! அது எனக்கும் குருபத்னிக்கும் கேவலம் அல்லவா?”

உடனே பிக்ஷை எடுத்து பசி போக்கிக் கொள்வதையும் உபமன்யு நிறுத்துகிறான். அடுத்த நாள் காலை...

குரு,"ஆஸ்ரமத்தில் உள்ள பசுவின் பாலைக் குடித்தாயா?"

உபமன்யு,"பசு கன்றுக்குட்டிக்கு ஊட்டி மீதி இருந்த கொஞ்சம் பாலைத் தான் குடித்தேன் ஐயா!"

குரு," அது பாவம்!"

அதுமுதல் பால் குடிப்பதையும் அவன் விடுகிறான். மறுநாள்...

மாடுகளை மேய்க்க மாணவர்கள் சென்றனர். ராத்ரியானதும் உபமன்யுவைத் தவிர அனைவரும் ஆஸ்ரமம் திரும்பினர். தௌமியர் அவனைத் தேடிக் கொண்டு காட்டுக்குள் சென்றார். அவன் பெயரை உரக்கக் கூவி அழைத்தார்.

ஒரு கிணற்றுக்குள் இருந்து அவன் கத்தினான்."ஐயா! பசி தாங்காமல் ஒரு பழத்தைச் சாப்பிட்டேன், உடனே கண்கள் மங்கிவிட்டன. இதோ தண்ணீர் இல்லாத கிணற்றுக்குள் விழுந்து கிடக்கிறேன்!" என்றான்.

"சரி கிணற்றுக்குள் ஒரு அரசமரக் கன்று வளர்கிறது. அதைப் பிடித்துக் கொண்டு தன்வந்த்ரி காயத்தி மந்த்ர ஜெபம் செய்!" என்றார் குரு.

அதைப் போலவே அவனும் தன்வந்த்ரி காயத்ரியை விழிப்புணர்வுடன் மனதார ஜெபிக்க, தன்வந்த்ரி அருளால் பார்வை மீண்டது.அப்போது கிணற்றுள் வளர்ந்துள்ள ஒரு மாரமத்தில் பழங்கள் இருப்பதைப் பார்த்தான், பசி வாட்டியது. ஆனால் குரு சொல்லாமல் இனி சாப்பிடக்கூடாது என்ற ஸ்திட புத்தியில் அப்படியே கிடந்தான்.

இதை உணர்ந்த தௌமியர் உடனே கிணற்றுக்குள் இறங்கி அவனை அன்புடன் அரவணைத்து ஆசீர்வதித்து மாம்பழங்களைச் சாப்பிட வைத்தார்.

குருவின் வார்த்தைகளுக்கு, ஸ்ரத்தையுடனும் ஸ்திட புத்தியுடனும் கட்டுப்பட்டுக் கல்வியைக் கற்பவனுக்கு மிக உயர்ந்த விழிப்புணர்வுடன் கூடிய அனைத்து ஞானமும் கிடைக்கும். இத்தகைய அறிவுடன் கூடியவர்களே உலகில் உள்ள மக்களுக்கு நல்ல வழி காட்ட முடியும்.

உபமன்யுவின் மிக உயர்ந்த இந்த குணத்தைக் கொண்டாடிய தௌமியர் தனக்கு அடுத்து தன் குருகுலத்தில் ஆசிரியராக உபமன்யுவையே தேர்வு செய்து நியமித்தார்.

பிற்காலத்தில் உபமன்யு மிக உயர்ந்த குருவாகப் பல மக்களுக்கு வழிகாட்டினார்.